THE HINDU

21 AUG 2021

PAGE 3

# Community College begins admission

## Interested candidates can register online by August 26

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Pondicherry University Community College has begun the admission process for various undergraduate courses for the new academic session.

The affiliate institution, which is modelled on American and Canadian community colleges, has called for online submission of applications from eligible students for courses in Computer Science, Commerce, Bio Chemistry, Visual Communications and UG vocational courses in Cardiac Lab, Operation Theatre and Optometry Technology.

There are diploma courses in Radiological Assistant, Electro Cardiography and Document Writing for one year, and certificate courses on Diabetic Care Management, and Yoga and Hospital Management for a duration of six months.




**Ready for new year:** The Community College in Lawspet is offering UG courses as well as vocational courses.

According to a university press note, the courses are designed in line with the needs and demands of the local community. More specifically, the main objective of the college is "to offer job-oriented courses based on the perceived community demand for specific manpower".

Interested students having required qualifications for admission to undergraduate, diploma and certificate courses are requested to register their names online by August 26. Additional information regarding admission is available on the college website (pucc.edu.in) or in person at the institution in Lawspet during office working hours.

THE HINDU (TAMIL)
20 AUG 2021
PAGE 3

# புதுவை பல்கலை.யில் பிஎச்டி, பட்டமேற்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் பிஎச்டி மற்றும் பட்டமேற்படிப்புகளுக்கு நீட்டிக்கப்பட்ட விண்ணப்பிக்கும் காலம் இன்றுடன் முடிகிறது.

இதுபற்றி பல்கலைக்கழக தரப்பில் தெரிவித்துள்ள விவரம் வருமாறு: புதுவை பல்கலைக்கழகத்தின் நடப்பு கல்வியாண்டிற்கான (2021 - 22) பல்வேறு முதுகலை, ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்பிற்கான சேர்க்கைக்கு இணைய வழியில் விண்ணப்பிக்க நீட்டிக்கப்பட்ட தேதியின் படி ஆகஸ்ட் 20 (இன்று) கடைசி தேதியாகும்.மேற்சொன்ன படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகள் வரும் செப்டம்பர் 2, 3 மற்றும் 4-ம் தேதிகளில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

20 AUG 2021

PAGE 6

புதுவை பல்கலைக்கழகத்தில்

# எம்பிஏ படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஆக. 20: புதுவை பல்கலைக்கழகத்தில் 2021-22 கல்வி ஆண்டிற்கான முதுகலை வணிக மேலாண்மை மற்றும் பன்னாட்டு வணிக மேலாண்மை படிப்புகளுக்கு பொது நுழைவுத் தேர்வு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுதொடர்பாக புதுவை பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுவை பல்கலைக் கழகத்தில் உலக தரத்திலான முதுநில்ல வணிக மேலாண்மைப் படிப்புகள் (எம்பிஏ) வழங்கப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக மேலாண்மை துறையில் படித்து முடித்த மாணவர்கள் உலகின் தலைச்சிறந்த தொழில் நிறுவனங்களை தோற்றுவித்தும், அதிகாரிகளாகவும் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் 2021-2022 கல்வியாண்டிற்கான மேலாண்மை துறை சார்பில் வழங்கப்படும் முதுகலை வணிக மேலாண்மை மற்றும் பன்னாட்டு வணிகதுறை சார்பில் வழங்கப்படும் முதுகலை பன்னாட்டு வணிக மேலாண்மை ஆகிய படிப்புகளுக்கு இந்திய மேலாண்மை நிறுவனம் (ஐஐஎம்) சார்பில் நடத்தப்படும் பொதுநுழைவுத் தேர்வு (சிஏடி) மூலம் விண்ணப்பங்கள் முன்னதாக வரவேற்கப்பட்டன.

தற்போது, மேற்சொன்ன படிப்புகளில் சேர்ந்து பயில புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு மூலமும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கல்வியாண்டில், மாணவர்கள் சேர்க்கையானது முதலில் இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொது நுழைவு தேர்வின் அடிப்படையில் நடத்தப்பட்டு, மீதமுள்ள காலி இடங்கள், புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இதற்கு மாணவர்கள் வருகிற 27ம் தேதிக்குள் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பல்கலைக்கழக அதிகாரப்பூர்வ இணையத்தளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.